கொண்டிருக்கின்றன. மேற்படி வேலைகள் முடிந்த பின்னர், பணியாளர் குடியிருப்பில்லங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

Honorary Medical Officers.

* Q. No. 294—THIRU R. E. CHANDRAN JAYAPAL: THIRU S. GANESAN: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to abolish the employment of the Honorary Medical Officers in the Government Teaching Hospitals?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: ஆம்.

Krishnagiri Hospital.

* Q. No. 295—DR. K. SAMARASAM: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal with the Government to open separate departments for Paediatrics and Cardiology in the Krishnagiri taluk Head-quarters Hospital?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: இல்லை.

உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள்.

* வினா எண். 296—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978 மார்ச் மாதம் முடிய உடல் ஊனமுற்றோர் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் கண் பார்வை அற்றவர்கள் எத்தனை **பேர்?**

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) 9,563 பேர்.

(ஆ) 613 பேர்.

செம்பியன் மாதேவியில் கோழிப் பண்ணை கட்டிடம்

*வினா எண். 297—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதியான செம்பியன் மாதேவி கிராமத்தின் அருகில் அமைக்கப்பட்ட கோழி வளர்ப்புப் பண்ணை மூடப்பட்டதால், அதற்காகக் கட்டிய கட்டிடங்கள் தற்போது எதற்காகப் பயன் படுத்தப்படுகின்றன?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : இக்கட்டிடம் பழுதுபட்ட நிலையிலிருந்தமையால், அவற்றின் ஒரு பகுதி செப்பனிடப்பட்டு, அதில் செம்பியன் மாதேவி கால் நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. கட்டிடத்தின் பிற பகுதிகளை பழுதுபார்த்து, அவற்றையும் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) முதலமைச்சர் தம் வினாக்களுக்குப் பதிலளிப்பது குறித்து :

திரு. வ. துலுக்காணம் : தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் இருக்கிறது ஒரே ஒரு அரிசன அமைச்சர்தான்.